அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 06/2006 (XI)

எனது இல : EST 5/1/41
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

2014.07.16

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணப் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>ஆகக்கூடிய சம்பள அளவுத்திட்டத்தினை அடைந்துள்ள அலுவலர்களுக்கான சம்பள ஏற்றக் கொடுப்பனவு</u>**

அலுவலர்களின் சம்பள அளவுத்திட்டத்தில் ஆகக்கூடிய படிநிலையினை அடைந்துள்ள மற்றும் 2007.01.25 ஆம் திகதிய 06/2006 (III) அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2008.06.12 ஆம் திகதிய 06/2006 (V) அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை ஆகியவற்றிலுள்ள தர முறைமை ஒன்றின் கிடைப்பின்மை காரணமாக அடுத்த தரத்திற்கு பதவியுயர்வுகள் வழங்கப்பட்டிருக்காத ஆரம்ப தரங்களிலுள்ள அலுவலர்களுக்கும் அவர்களுக்கு தனிப்பட்டதாக சம்பள ஏற்றங்களை 2010.12.31 ஆம் திகதிவரை வழங்குவதற்கு ஏற்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ள 2011.08.03 ஆம் திகதிய 06/2006 (IX) அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் மீது தங்களின் கவனம் இத்தால் ஈர்க்கப்படுகின்றது.

02. 06/2006 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக்கு அமைய ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மற்றும் சேவைப் பிரமாணக்குறிப்புக்கள் என்பவற்றைத் திருத்தாமை காரணமாக இடைப்பட்ட தரங்களின் ஆகக்கூடிய சம்பள அளவுத்திட்டத்தில் தேங்கியுள்ள அலுவலர்களுக்கும் முன்னைய ஆட்சேர்ப்பு நடைமுறையிலுள்ள தர முறைமையின் கிடைப்பின்மை காரணமாக அடுத்த தரத்திற்கு பதவியுயர்வு வழங்கப்பட்டிருக்காத அலுவலர்களிற்கும் சேவைப் பிரமாணக் குறிப்பு / ஆட்சேர்ப்பு நடைமுறைக்கான அனுமதியினைப் பெற்றதன் பின்னர் உரிய தரத்திற்குள் அவர்கள் உள்வாங்கப்படும் வரை ஆகக்கூடிய சம்பள அளவுத்திட்டத்திற்கு அப்பால் சம்பள ஏற்றங்களைச் செலுத்துவதற்கு முதலாவது பந்தியில் குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கைகள் மூலம் எந்தவித ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

03. ஆதலினால், ஏனைய சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருந்த பின்னரும் புதிய சேவைப் பிரமாணக்குறிப்பிற்கான அல்லது புதிய ஆட்சேர்ப்பு நடைமுறைக்கான அனுமதியினைப் பெற்றுக்கொள்ளாததன் காரணமாக ஆகக்கூடிய சம்பள அளவுத்திட்டத்தின் மீது தேங்கியுள்ள மற்றும் தேக்கமுறச் செய்யப்பட்ட அலுவலர்களுக்கும், அவர்களுக்கு தனிப்பட்டதாக மற்றும் 06/2006 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் நடைமுறைக்கு வரும் திகதியாகிய 2006.01.01 ஆம் திகதியிலிருந்து புதிய ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கான

அனுமதித் திகதிவரை தர முறைமைகளின் கிடைப்பின்மை காரணமாக அடுத்த தரத்திற்கு பதவியுயர்த்தப்படுவதற்கு இயலாதிருந்த அலுவலர்களுக்கும் அவர்கள் உரிய தரத்தின் ஆகக்கூடிய சம்பளப் படிநிலையை அடைந்த தினத்திலிருந்து ஆட்சேர்ப்பு நடைமுறைகள் / சேவைப் பிரமாணக்குறிப்புக்களிற்கான அனுமதித் திகதி வரை சம்பள ஏற்றங்களை உழைத்திருப்பின் சம்பளப் படிநிலைகளைச் செலுத்துவதற்கு 2014.06.19 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க சம்பள ஏற்றங்கள் நிறுத்தப்பட்ட அலுவலர்களுக்கு அவர்கள் அவசியமான தகைமைகளைப் பூர்த்திசெய்திருக்கும் போது சம்பள ஏற்றங்களைச் செலுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

ஒப்பம்./ பி.பீ. அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு